04.11.2023 REA 1/2022 in EP 37/2017 ம.சா.1 ராஜேஸ்வரி

குறுக்கு விசாரணை

நான் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன். என் கணவர் காவல்துறையில் பணிபுரிந்து இறந்துவிட்டார். அவர் இறந்து 17 ஆண்டுகள் ஆகிறது. அசல் வழக்கு 2013 ஆம் ஆண்டு தாக்கல் செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியும். 2013 ஆம் ஆண்டே நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணையை எடுத்துவந்து காண்பித்துள்ளார்கள். 2014 ஆம் ஆண்டு மனுசொத்தை பற்றுகை செய்து தண்டோரா மூலம் விளம்பரப்படுத்திய விவரம் எனக்கு தெரியாது. தீர்ப்பாணையை நிறைவேற்ற 1ம் எதிர்மனுதாரர் நிறைவேற்று மனு தாக்கல் செய்த விவரம் தெரியும். ம.சா.ஆ.2, 4 ஆவணங்கள் ஒரே தேதியில் ஏற்பட்ட ஆவணங்கள் ஆகும். ம.சா.ஆ.2, 4 ஆவணங்கள் ஏற்பட்ட அன்று 2ம் எதிர்மனுதாரரை நான் பார்த்தேன். லதாவின் பொதுஅதிகார முகவர் கந்தன் என்னுடைய தம்பி. என்னுடைய தம்பிதான் என்னை ஏமாற்றி சொத்தை விற்றுவிட்டார். வழக்கு குறித்து 2013ஆம் ஆண்டே தெரிந்தநிலையில் இம்மனுவை ஏன் 2022 ஆம் ஆண்டு தாக்கல் செய்தேன் என்றால் கடன்கொடுத்தவர்கள் வந்து கேட்டதால் இம்மனுவை தாக்கல் செய்தேன். பைனான்ஸ் கம்பெனி, வங்கியில் இருந்தும் வந்து கேட்டார்கள். அசல் வழக்கை 1ம் எதிர்மனுதாரர் 20.12.2013 ஆம் தேதி தாக்கல் செய்து வழக்கு நிலுவையில் இருந்தபோது நான் 07.02.2014 ஆம் தேதி கிரையம் பெற்றுள்ளேன் என்றும் அதனால் லதா பெற்ற கடனை நான் தான் திருப்பி செலுத்தவேண்டும் என்று சொன்னால் கடன் விவரம் தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு கடன்தொகையை நான் தான் திருப்பி செலுத்தவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை

இல்லை.